**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.STC.1709/2024**

| Deposition of Name | தில்லை நடராஜன் SSI | Prosecution | LW-8 as PW-5 |
|---|---|---|---|
| Father Name | | Defence | |
| Station | திருவெண்காடு | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | /2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**10.11.2025 எதிரிகள் ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது திருவெண்காடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கீர்த்திவாசன் அவர்களின் கையெழுத்தும், கையொப்பாமும் நான் நன்கு அறிவேன். ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் அவர்களுக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 25.09.2023ம் தேதி 13.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் கீர்த்திவாசன் நிலைய பொறுப்பில் இருந்த போது தேவேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று திருவெண்காடு காவல்நிலைய குற்ற எண்.174/2023 இ.த.ச பிரிவுகள் 294(b), 352, 506(i) ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 29.09.2023 ம் தேதி 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாயகிருஷ்ணன் மற்றும் குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி **ஆவணங்கள் அ.சாஆ 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. வழக்கின் எதிரிகளை தேடிய நிலையில் கடந்த 29.09.2023 ஆம் தேதி 14.30 மணிக்கு எதிரி இளவரசன் மற்றும் ராஜேந்திரன் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். அன்றைய தினம் 17 மணிக்கு எதிரி பிரதீஷ் குற்ற காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். கடந்த 30.09.2023 ஆம் தேதி இந்த வழக்கு விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 352, 506(i) கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**